Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (8-4-66) இதழ் 60

விசுவாவசு பங்குனி 26 துல்ஹஜ் பிறை 16 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை



சாயம் போடுவதும் ரைக்கிளீன் செய்வதும்

சன்ஸெட் டையேர்ஸ் அன் ரைக்கிளீனேர்ஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

பெரியகடை யாழ்ப்பாணம்.

போன்: 474 தந்தி: ரைக்கிளீன்

## டொல்பின்களை கொல்லாதீர்

### ரஷ்யா கோரிக்கை

மாஸ்கோ, ஏப். 6

கடற் பிராணியான ''டொல்பின்'' மீன்கள் மீது மீனவர்கள் கருணை காட்ட வேண்டுமென்று ரஷ்யா ஒரு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோளுக்குப் பல நாடுகள் செவிசாய்த்திருந்த பொழுதிலும், இஸ்ரேல் நாடு

(6-ம் பக்கம் பார்க்க)

# உணவுப் பொருள் நிறைய கிடைக்கும்

## புதுவருடத்தின் போது தட்டுப்பாடு இருக்காது

கொழும்பு, வெள்ளி

புதுவருடத்தின்போது பொதுமக்கள் அத்தியாவசிய உணவு மற்றும் பாவனைப் பொருட்கள் குறித்து கவலைப்பட வேண்டிய நிலைமை இருக்காது என்று தெரிகின்றது. கொழும்புத் துறைமுகத்தில் இந்தப் பொருட்கள் போதிய அளவு வந்து சேர்ந்திருப்பதுதான் அதற்கு காரணம்.

இப்பொழுது கொழும்புத் துறைமுகத்தில் வந்து சேர்ந்துள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களில் உருளைக் கிழங்கு, வெங்காயம், கருவாடு, பால்உணவுகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

3 ஆயிரம் டன் உருளைக் கிழங்கு, 8 ஆயிரம் டன் வெங்காயம், 9 ஆயிரத்து 50 டன் கருவாடு, 1 ஆயிரத்து 80 டன்பட்டர், மற்றும் ஏராளமான பால்உணவுகள், ஜவுளி வகைகள், டயர்கள், மோட்டார் உதிரிப் பாகங்கள் போன்றவை கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளன.

மேற்கொண்டும் ஏராளமான உணவுப் பொருட்கள் வந்து சேரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ரொடீஷியா மீது கடுமையான கட்டுப்பாடுகள்

### பிரிட்டன் பரிசீலனை செய்வதாக யுதாண்ட் தகவல்

நியூயோர்க், ஏப். 7

ரொடீஷியா மீது மேலும் கடுமையான தடை உத்தரவுகள் விதிப்பது குறித்து பிரிட்டன் ஆலோசித்து வருகிற தென்று ஐக்கிய நாடுகள் பிரதம காரியதரிசி யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில்தான் மேற்கண்ட விபரத்தை யுதாண்ட் வெளியிட்டார்.

ரொடீஷியா நிலைமை குறித்து அவர் தெரிவிக்கையில், அங்கு தற்பொழுது நிகழ்ந்துவரும் சம்பவங்கள் திருப்தியளிக்கக் கூடியதாக வில்லை என்றும் இதுபற்றி தாம் மிகுந்த கவலைகொண்டிருப்பதாகவும் கூறினர்.

ரொடீஷியா விவகாரத்தில் ஐ. நா தொடர்ந்து தலையிடுமா என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு யுதாண்ட் பதிலளிக்கையில், ஐக்கியநாடுகள் பந்தோபஸ்து சபை, ரொடீஷியா மீது பூரண அதிகாரத்துடனை கட்டுப்பாடுகளை விதிப்பது அசாத்திமாகாது என்று கூறுவதற்கல்லை என்றும் தெரிவித்தார்.

## மாதமொரு உணவுக் கப்பல் யாழ்ப்பாணம் வரும்

### உணவு மந்திரி உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்துக்கு மாதமொரு உணவுக் கப்பலை அனுப்ப தாம் ஒழுங்குசெய்வதாக இங்கு விஜயம் செய்து திரும்பிய உணவுவிவசாய மந்திரி திரு எம். டி. பண்டா வாக்குறுதியளித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதை இயந்திரப்படகொன்றில் சென்று மந்திரி பார்வையிட்டார்.

மந்திரியுடன் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இருவர், உணவுஅமைச்சின்

(6-ம் பக்கம் பார்க்க)

## புதிய மசோதா பற்றி மந்திரி

கொழும்பு, வியா.

கொலை புரியக்கூடிய பயங்கர ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கு கடும் தண்டனை விதிப்பதற்கான மசோதா மீதான விவாதம் நேற்று செனட்சபையில் வாதிக்கப்பட்டபோது இது தனிமனிதனின் சுதந்திரத்தில் தலையிடுகிறது என செனட்டர் வேர்ணன் திஸநாயகா தெரிவித்தார்.

இதற்குப்பதிலளிக்கையில் நீதிமந்திரி திரு. பார்லி விஜயமானே கூறியதாவது: ''இவ்விதபயங்கர ஆயுதங்களை வைத்திருப்பதாகக் காணப்படுபவர் மீது தண்டனை வழங்கப்படும். இதன் நோக்கம் கேடுவிளைவிக்கும் எண்ணத்துடன் தயாரிக்கப்படும் ஆயுதங்களுக்கு ஒரு முடிவு கட்டுவதற்கே.''

## உடுவில் கொலை வழக்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு தாக்கல்

மாவிட்டபுரம், வியா.

உடுவில் மல்வம் கொலை வழக்கு நேற்று மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாறுவின் முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதுஎதிர்தரப்பு வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்தினர். தொகுப்புரையின் பின் நீதிபதி, பொலிசாரால் எதிரி மீது இலங்கை பீனல் கோர்ட் 29-ம் பிரிவின்கீழ் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த குற்றப் பத்திரத்தை பீனல் கோர்ட் 300-ம் பிரிவின்கீழ் கொலை செய்ய முயன்றதாக மாற்றியமைத்ததுடன் எதிரியை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கும் நிற்கும்படியும் உத்தரவிட்டார். அத்துடன் எதிரியை 3000 ருபா பிணையில் செல்லவும் அனுமதியளித்தார்.

இவ்வழக்கில் உடுவில் மல்வத்தைச் சேர்த்த தவசிகந்தையா என்பவர் சென்ற வருடம் மார்கழி மாதம் இரண்டாம் திகதி அதே ஊரைச்சேர்ந்த வல்லிஜயன் என்னும் ஊமையை கிறிஸ்கத்தியால் குத்திக்கொலை செய்ததாகசுன்னாகம்பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஸி வீரசூரியாவின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரனின் அனுசரணைவுடனும் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினார்.

நீதிபதி எதிரிதரப்பு வழக்கறிஞரின் தொகுப்புரையைக் கேட்டபின் எதிரிமீது

(6-ம் பக்கம் பார்க்க)

## சென்னைக் கோஷ்டிக்கு வெற்றிக் கேடயம்!

கொழும்பு, வியா.

இலங்கை கோஷ்டிக்கும் சென்னை கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஆனால் சென்னை கோஷ்டி முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்கள் எடுத்ததனால், 'கோபாலன் வெற்றிக் கேடயம்' சென்னைக் கோஷ்டிக்கு வழங்கப்பட்டது.

## பெரியவெள்ளிக்கிழமை

கொழும்பு. வெள்ளி

இன்று பெரிய வெள்ளிக் கிழமை உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் ஜேசுநாதர் [illegible] டதை நினைவு கூருமுகமாக இத்தினத்தை இன்று கொண்டாடுகிறார்கள் நாட்டிலுள்ள கிறிஸ்தவக்கோவில்கள்பலவற்றிலும் இன்று பிரார்த்தனைகள் நடைபெறும்.

## வட்டாரத்துக்கொரு திறந்தவெளிஅரங்கு

### மேயர் துரையப்பா திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''யாழ்ப்பாண மாநகர சபையின் பதினேழு வட்டாரங்களிலும், வட்டாரத்திற்கொரு திறந்தவெளியரங்காக அமைத்து கலைநிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யத் திட்டமிட்டுள்ளேன்'' என்று யாழ்ப்பாண மேயர் திரு. அ. த. துரையப்பா யாழ்ப்பாணம்திறந்த

(6-ம் பக்கம் பார்க்க)

வடமராட்சி வாழ் மக்களுக்கு

அரிய சந்தர்ப்பம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்
புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
8-4-66 தொடக்கம்

யாழ்ப்பாணம் சீப்சைட்
ஜவுளி மாளிகையில்

C. W. E. புடவைகள் கூப்பனுடன்
கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்
சீப்சைட்

சி. டபிள்யூ. ஈ. அங்கீகாரம் பெற்ற
பிடவை வியாபாரிகள்

பிரதான வீதி, :: :: பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இந்த உடல் இறைவனின் புனித ஆலயம். அதை திடமாகவும்சுகத்துடனும் வைத்திருங்கள், அப்போதுதான் அவரை சந்திக்க முடியும். ஆனால் உடலின்மீது பற்று வேண்டும். உடல் நோயுற்றால் தியானம் செய்யமுடியாது. ஆத்மஞானமடைய உடல் ஒரு கருவியாகும்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 359

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண் பங்குனி மீ 26 உ (8-4-66)


## ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த வழி

ஓய்வுநேரத்தைப் பயனுள்ளமுறைகளில் செலவிடுவதற்கு இக்காலஇளைஞர்களுக்கு வழிவகுத்துக் கொடுக்கவெனத் தனியான அமைச்சு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என லேடி குமாரசாமி தெரிவித்திருக்கிறார். இதற்குத் தனிஅமைச்சு அவசியமில்லை என்றாலும் வீண்பொழுது போக்கும் நமது இளைஞர்களின் ஓய்வு நேரததைப் பயனுள்ளவழிகளில் செலவிட வழிவகுப்பது நாட்டின் முன்னேற்றத்துக்கும் இளைஞர்களுக்கும் பயனளிக்கும்.

பாடசாலைப்படிப்பு முடிந்து வெளியேறிய நமது இளைஞர்களில் பலர் வேலைவாய்ப்புக் கிடைக்காமலிருக்கின்றனர். உத்தியோகம் கிடைத்த நமது யுவதிகளும் வாலிபர்களும்கூடதங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை வீணாகச்செலவிடுகின்றனர். வீண் சர்ச்சைகளிலும் வீண் பேச்சுக்களிலும் ஈடுபட்டு பொன்னான நேரத்தை மண்ணாக்குவோரும், வீதிகளிலும் சந்திகளிலும் நின்றுவம்பளப்போரும் பலர். ஜப்பானில் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் ஓய்வு நேரத்தை வீணாக்காமல் சிறுசிறு தொழில்களை குடிசைக் கைத்தொழில்களாகச் செய்கின்றனர். இதனால் அவர்களின் பொருளாதாரம் விருத்தியடைந்துள்ளதுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஜப்பான் நாடும் நாட்டு மக்களும் வெகுவேகமாக முன்னேற்றமடைந்துள்ளனர். எங்கள் நாட்டைப்பொறுத்தளவிலும் இவ்வித முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம். வெங்காயக் கூடை பின்னுவதன்மூலம் மட்டுமே பல குடும்பங்கள் நிறைய வருமானம் பெற முடியும். இதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொதுஸ்தாபனங்கள் மூலம் கிராமாபிவிருத்தி, குடிசைக்கைத்தொழில் இலாகா வழிகாட்டமுடியும். குடிசைக் கைத்தொழில், தொழில் பயிற்சிகள்மூலம் வேலையில்லாத் திண்டாட்டமும் குறைய வழிபிறப்பதுடன் தேசிய பொருளாதாரமும் விருத்தியடையும்.

இவைதவிரஓய்வுநேரங்களை இளைஞர் தமக்கும் பிறருக்கும் பயன்படக்கூடிய வகையில் செலவிடுவதற்கு, கல்வி நிலையங்களிலும் மற்றும் கலைநிலையங்களிலும் ஓவியம், சங்கீதம் முதலிய கலைகளில் பயிற்சியளிக்கவும், நூல்நிலையங்கள், சிறந்த விளையாட்டு அரங்குகள் மற்றும் பொழுதுபோக்குவதற்கான வசதிகளையும் உள்ளூராட்சி மன்றங்களின் உதவியுடன் அரசாங்கம் செய்யவேண்டும்.

ஓய்வு நேரத்தை பயனுள்ள வழிகளில் செலவிடுவதற்கு ஒழுங்கு செய்வதன் மூலம் நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களையும் குறைக்க முடியும். எனவே லேடி குமாரசாமியின் யோசனையை கல்வி, கலாச்சார அமைச்சரும், விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரும் பரிசீலனை செய்வது நல்லது.

## 'அரசியலிலிருந்து ஒதுங்கி வாழுங்கள்'

### ஜே. ஆர். புத்திமதி

வெரஹரா, வியா.

'அலுவலகத்துக்குச் செல்லும்போது உங்களது அரசியல் சார்புகளை விட்டுச்செல்லுங்கள்' என பதில்பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா வெரஹராவிலுள்ள இ. போ. ச. ஊழியர்கள் மத்தியில் பேசுகையில்குறிப்பிட்டார்.

அரசியல் துறையில் முன்னேறியிருக்கும்இலங்கையில் சதிமுயற்சி செய்வது எதற்காகஎன்பதற்கான காரணம் விளங்கவில்லை யென்றும் இதற்கான தேவை கிடையாது என்றும் திரு. ஜே ஆர். தெரிவித்தார்.

## பலி நிறுத்தியதற்கு பாராட்டு

சுழிபுரம், வியாழன்

''நாகரீகம் அடைந்த மக்கள் என்று நாம் பெருமையுடன் கூறும்போது எம் மத்தியிலுள்ள அநாகரிகச் செயல்கள் முற்றாக நீக்கப்படல்வேண்டும். பஞ்சமா பாதங்களில் ஒன்றாகிய கொலையை செய்துவந்த எமது சைவ ஆலயங்கள் பல இன்று இச்செயலை கைவிட்டு அருள்சாலைகளாக விளங்குவதை நாம் காண்கின்றோம், கோவில் முகாமையாளர்கள் தாமாக முன்னின்று ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் பலியிடும் செயலைவிட்டு, கூட்டுப்பிரார்த்தனை, பஜனை பிரசங்கங்கள், அருள்உரைகள் ஆகியவற்றை நடாத்தி கடந்த இரவு நடைபெற்ற பொங்கல் பூசையின்போது ஓர் புதுமையை நிலைநாட்டியுள்ளனர்'' என்று காளுவன் வயிரவகோவில் பொங்கல்விழாவின்போது இளைப்பாறிய நீர்ப்பாசன டொறியியலாளர் திரு. அ. தையல்பாகர் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ். கணபதி பிள்ளை தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் புலவர் நா. சிவபாதசுந்தரம் உட்பட மற்றும் டலர் பேசினர்.

## சினத்ராவுக்கு தடை

மெக்ஸிக்கோநகர், ஏப் 7

பாடகர் பிராங்க் சினத்ரா மெக்ஸிக்கோ வருவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நடித்தபடமொன்று இங்கு தடைசெய்யப்பட்டதுடன் இவரது பாடல்கள் வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்புவதற்கும் தடை உத்தரவுகள் விதிக்கப்பட்டுள்ளன. (பி.டி.வி.)

### இன்று பெரிய வெள்ளிக்கிழமை

## கிறிஸ்துவின் பரிவட்டத்துணி

[சிலுவையில் மரித்த யேசுகிறிஸ்துவின் புனித உடலை பரிவட்டத்துணியொன்றினால் சுற்றி கல்லறையில் அடக்கம் செய்தனர். அத்துணியில் கிறிஸ்துவின் தேக உருவம் அற்புதமான விதமாகப் பதிந்து இன்றளவும் கிறிஸ்துவின் தோற்றமும் இவ்விதமாகத்தான் இருந்திருக்கவேண்டுமென்பதை உலகுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது. ரியூறின் நகரில் பாதுகாக்கப்பட்டு வரும் இப்புனித துணியைப்பற்றின விபரங்கள் இக்கட்டுரையில் தரப்படுகின்றன,]

-சாமுவேல் பெனடிக்ற்-

ரோமானிய வீரர்கள் கிறிஸ்துவைக் கசைகளால் அடித்தனர். அவரது உடல் முழுவதும் இரத்தக்காயங்களால் மூடப்பட்டது. பாரச் சிலுவையைதோளில் சுமத்தி கல்வாரி மலைமட்டும் இழுத்துச் சென்றனர். இரத்தத்துடன் வியர்வையும் பெருகி தேகமெங்கும் பரவியது. இறுதியில் ஆடைகளைக் களைந்து சிலுவையில் அறைந்து கொன்றனர் மாபாவிகள்.

சோர்வு, களைப்பு, ஆயாசம், கசையடிகளின் வேதனை, சிலுவையின் பாரம், இவ்வித சொல்லொணாத் துன்பங்களால் மூழ்கிய கிறிஸ்துவின் உடலம் வியர்வையாலும் இரத்தத்தாலும் மூடப்பட்டிருந்தது. அரிமத்தியா என்ற ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இரவில் பிலாத்துவிடம் சென்று கிறுஸ்துவின் உடலை அடக்கம் செய்ய உத்தரவு கேட்டார். தேசாதிபதியும் அனுமதி அளித்தான்.

யோசேப்பும் கிறிஸ்துவின் நண்பர்களும் கிறிஸ்துவின் உடலைச் சிலுவையிலிருந்து இறக்கினர். தாம் கொணர்ந்த பரிமள தைலங்களை அவசரமாகப் பூசினர். உடலத்தைக் கழுவவோ அல்லது வாசனைத் திரவியங்களை நன்கு பூசவோ அவர்கட்கு நேரம் கிடைக்கவில்லை. பக்கத்துத் தோட்டத்திலிருந்த கல்லறையில் கிறிஸ்துவின் உடலை ஒரு பரிவட்டத் துணியால் சுற்றி அடக்கம் செய்தனர்.

### உயிர்த்தெழுதல்

ஓய்வுநாளைக்குப்பின் அதிகாலையில் கிறுஸ்துவின் அன்புக்குப் பாத்திரமான சில ஸ்திரீகள் வாசனைத் தைலங்களை அவர் திருமேனியில் பூசுவதற்காகச் சென்றபோது கல்லறையின் கல்புரட்டப்பட்டிருப்பதையும் சடலம் அங்கில்லாதிருப்பதையும் கண்டு அதிர்ச்சியடைந்து இச்செய்தியை அவரது சீடர்கட்கு அறிவித்தனர். அவர்களும் வந்து கிறிஸ்து பெருமானின் திருவுடலைக் காணாது அவர் தாம் கூறியபடியே உயிர்த்தெழுந்தார் என நம்பினர்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து அன்றுதானே மரியாளுக்கும் பின்னர் எம்மாவுஸ் சென்ற இரு சீடர்களுக்கும் காட்சியளித்தார். நாற்பது நாட்கள் அப்போஸ்தலர்களுடன் இங்கு தாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துதான் என்பதை உறுதிப்படுத்திப் பின்னர்பரலோகம் சென்றார். சரித்திரத்தொடர்புக்காக கிறிஸ்துவின் உயிர்த்தெழுகையை இங்கு சற்று விளக்கமாகக் கூறினோம். கிறிஸ்துவின் சடலத்தைக் காணவில்லை என்றறிந்த அவரது முக்கியசீடர்களான இராயப்பரும் அருளப்பரும் கல்லறைக்கு ஓடிவந்தபோது சடலத்தைக் காணாததுடன் வேறும் ஒரு விடயத்தை அவதானித்தனர்.

### பரிவட்டத்துணி

கல்லறையினுள் பரிவட்டச்சீலைகள் மடித்துவைக்கப்பட்டிருந்தன. கிறிஸ்துவின் சடலம் ஈரத்தன்மையுள்ளதாக இருந்தது என்பதை நாம் மேலே கவனித்தோம். கசையடிகளால் [illegible]

சதைத்துண்டங்கள், அவற்றிலிருந்து வெளிப்போந்த நிணநீர், தேகமெங்கும் பொங்கிவழிந்த செங்குருதி, இளைப்பாலும் களைப்பாலும் சிந்தப்பட்ட வியர்வை, மற்றும் தேகமெங்கும் படிந்த தூசிகள். இவற்றைக கழுவுதற்கு நேரமின்றி வாசனைக் கலவைகளை அவசரமாகப் பூசி பரிவட்டச் சீலையில் சுற்றினர். இவையனைத்தும் சேர்ந்து கிறிஸ்துவின் உருவம் அப்பரிவட்டத்துணியின் இருபக்கங்களிலும் பதிந்துவிட்டன.

### உருவச்சாயல்

பரிவட்டத் துணியின் ஒரு பக்கம் கிறிஸ்துவின் முன்பக்கத்தை அதாவது முகம், நெஞ்சு முயலியவற்றின் சாயலை பிரதிபிம்பிக்க மறுபகுதி முதுகுப்புறப் பகுதியின் உருவத்தை எடுத்துக் காட்டுகிறது. கிறிஸ்துவை அறைந்த சிலுவை, ஆணிகள் முதலிய மற்றையபுனித பொருள்களுடன்இப்பரிவட்டத்துணியையும்அரியதோர் பொக்கிஷமாக ஆதிக்கிறிஸ்தவர்கள் காப்பாற்றிவந்தனர். சிலகாலத்தின்பின்னர் ஜெருசலேமிலிருந்து எதிரிகள் படையெடுத்து அந்நகரத்தையே நிர்மூலமாக்கும்போது கிறிஸ்துவின் பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் வெகு ஜாக்கிரதையாக கல்வாரி மலையின் பக்கமாகவுள்ளதோர் குன்றில் புதைக்கப்பட்டதால் அழிவுக்குத் தப்பின.

### புனிதை ஹெலனு

நான்காம் நூற்றாண்டின்போது சக்கரவர்த்தி கொன்ஸ்தந்தின் ரோமைச் சக்கராதிபத்தை ஜெயம் கொண்டபின் தமது சத்தியத்தைக் காக்க கத்தோலிக்கசமயத்துள் இணைந்தார். அவரது அன்னை ஹெலனாசீமாட்டி தனது புதல்வனின் ஆதரவுடனும் பெருஞ் செல்வத்துடனும ஆராய்ச்சியாளர்கள் சுவிசேஷக நிபுணர்களுடனும் பலஸ்தீனா சென்றார். கிறிஸ்துவின் புனித பாடுகளுடன் சம்பதந்ப்பட்ட எல்ல உபகரணங்களையும் தேடும் பெரும் முயற்சியில் ஈடுபட்டாள்.

அவளது அரிய முயற்சியின்பயனாக மூன்று நூற்றாண்டுகளாக மறைந்திருந்த கிறிஸ்துவின் வரலாற்றில் பிரதம பங்கு கொண்ட புனித பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் புதைபொருள் ஆராய்ச்சிக்காக கிறிஸ்தவ உலகு புனிதை ஹெலனுவுக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இவ்விதம் கண்டெடுக்கப்பட்ட பொருட்களுள் பரிவட்டத்துணியும் ஒன்றாகும். கொன்ஸ்தாந்திநோப்பிள் பட்டணத்தில் ஓர் தேவாலயத்தில் பரிவட்டத்துணி சக்கரவர்த்தியின் பாரியாரான புஸ்க்கேலியா அரசியல் ஸ்தாபிக்கப்பட்டு கத்தோலிக்க மக்களின் வணக்கத்துக்குள்ளான தென வரலாற்றுப் பேராசிரியர் நிசேபோரா கலிஸ்டாட் தம்து நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

ஆண்களைப் பற்றி பெண்கள் என்ன நினைக்கிறார்கள் என்றும்; பெண்களைப் பற்றி ஆண்கள் என்ன நினைக்கிறார்களென்றும் மேலைநாடுகளில் அடிக்கடி ஒருவித கணக்கெடுப்பு நடத்தி வருவார்கள். ஆண்பாலார் பெண்பாலார் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வது நன்மை தானே?

சமீபத்தில் மேற்கு ஜெர்மனியில் இப்படிப்பட்ட ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள். இதன்பிரகாரம் அங்குள்ள ஆண்மக்கள் பெண்களிடம் எதை அதிகமாக விரும்புகிறார்கள் தெரியுமா? அழகு, ஆற்றல், கனிவு, இனிமை ஒன்றும் கிடையாது! சிக்கனம் தான் முதலிடம் பெறுகிறது. 100-க்கு 65 ஆண்கள் பெண்களிடம் சிக்கனமானநடத்தை இருப்பதையே மற்ற எல்லாவற்றையும்விட அதிகமாகவிரும்புகிறார்கள். கற்புடமை இரண்டாவதாக வருகிறது. 62வீத ஆண்கள் அதை எதிர்பார்க்கிறார்கள். மூன்றாவது துப்புரவு. 60 வீதஆண்கள் பெண்கள் துப்புரவாய்இருப்பதையே முதலில் விரும்புகிறார்கள்.

இவற்றிற்கடுத்தாற்போல என்னென்ன குணங்கள் இடம்பெறுகின்றன என்று பாருங்கள்! மேற்கூறிய மூன்றையும் தவிர நான்காவதாய் வருவதுநேர்மை. அடுத்து கருணை, சுறுசுறுப்பு, வாய்மைமுதலியன வருகின்றன.

ஆமா, ஆண்கள் ஒரு காலத்தில் அழகுள்ள பெண்களையல்லவா விரும்பினார்கள். அந்த அழகு எங்கே போய்விட்டதென்று நீங்கள் கவலைப் படுகிறீர்களல்லவா?

பேட்டிகாணப்பட்ட ஆண்களில் ஆக 33வீதம் பேர்தான் பெண்களிடம் அழகு இருக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அழகுக்கும் அடுத்தாற்போலத் தான் தான்மூளை வருகிறது. பெண் புத்தி பின்புத்தி என்பதை மேற்கு ஜெர்மனியரும் திடமாக நம்புகிறார்களென்பதை இது காட்டுகிறதல்லவா? ஆகவே மேற்குஜெர்மன் ஒருவன் பெண்ணிடம் எதிர்பார்க்கும் குணங்களின் வரிசைக்கிரமம் வருமாறு; சிக்கனம், கற்பு, துப்புரவு, நேர்மை, கருணை, ஆற்றல், வாய்மை, அழகு, அறிவு.

மேற்குஜெர்மன் ஆண்கள் பெண்கள் விஷயத்தில் இந்த மாதிரி நினைத்த நினைத்த மாதிரி தெரிவுசெய்துகொள்ளவும் முடியும். ஏன் தெரியுமா? அங்கே ஆண்களைவிட பெண்கள்தான் அதிகம். பெண்களின் தொகை3 கோடியே 10 லட்சம் ஆண்களின் தொகை 2 கோடியே 60 லட்சம்.

திருச்சிக்கருகிலுள்ள தல்மியாபுரத்தில் உண்ணாவிரதப்போட்டியொன்று நடைபெற இருக்கிறது. தம்முடைய தொழிலாளர் சங்கத்தை அரசாங்கம் அங்கீகரிக்காவிடில் தல்மியாபுரம் சிமெந்துதொழிற்சாலை வாசலில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்போவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உப தலைவர் திரு. அருணாசலம் எம் எம் சி. தெரிவித்திருக்கிறார். இவர் உண்ணாவிரதமிருந்தால் அதை ஆட்சேபித்துதாமும் போட்டிக்கு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்போவதாக திருச்சி காங்கிரஸ்கமிட்டியின் மாஜி தலைவர் திரு. பழனியாண்டி சவால்விட்டிருக்கிறார். இவர் தேசிய சிமெந்து தொழிலாளர் சங்கத்தின் தலைவராவார். இந்த சங்கத்தையே அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. இந்த உண்ணாவிரத போட்டியை திருச்சி நகரம் முழுவதும் சுவரொட்டிகள் பறைசாற்றுகின்றன.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எமது உள்நாட்டு விவகாரத்தில் குறுக்கிடாதீர்”

## சீனுவுக்கு கானு கண்டனக்குறிப்பு

ஆக்ரா, எப்ரல் 7

**தனது உள்நாட்டு விவகாரத்தில் கம்யூனிஸ்ட் சீன அப்பட்டமாகத் தலையிடுவதாகக் கானு குற்றம் சுமத்தியுள்ளது.**

கம்யூனிஸ்ட் சீனுவுக்கு கானு அனுப்பியுள்ள கண்டனக் குறிப்பொன்றில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

''கானுமீது சீன தலையிடுவது இப்பொழுது மிகவும் அதிகரித்துள்ளது. கானுவுக்கு வஞ்சனை செய்யும் நோக்கத்துடன் சில பாரதூரமான செயல்களில் சீன ஈடுபட்டு வருகிறது'' என்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கினியில் தஞ்சம் புகுந்திருக்கும் டாக்டர் நிக்ருமாவுக்கு சீன உதவுகின்றது. சீன அளித்திருக்கும் வாக்குறுதிகளின் அடிப்படையில்தான் நிக்ருமா கானுமீது தொடர்ந்து தலையிட்டு வருகின்றார்'' என்றும் அக்குறிப்புக் கூறுகின்றது.

### மற்றுமொரு செய்மதி

மாஸ்கோ, ஏப். 7

சோவியத் யூனியன் மற்றுமொரு ஆள்இல்லாத செய்மதியை நேற்று விண்வெளிக்கு அனுப்பிவைத்தது.

### நீவின் அமெரிக்க விஜயம்

ரங்கூன், ஏப். 7

பர்மிய ராஜாங்கத் தலைவர் ஜெனரல் நீவின் இவ்வருட இறுதியில் அமெரிக்காவுக்கு விஜயம்செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸனின் அழைப்பின் மீது ஜெனரல் நீவின் அங்கு செல்கின்றார்.

### ஆஸி. உதவி

கான்பரா, ஏப். 7

இந்தியாவுக்கு ஆஸ்திரேலியா 90 லட்சம் மோதுமையும், பால்பவுடரும் அனுப்பிவைத்துள்ளது.

### சாதனைக்குப் பாராட்டு

சென்னை, ஏப். 7

இந்திய நீச்சல்வீரர் மிகிர் சென்னுக்கு தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு. எம்.பக்தவத்சலம் அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில்; வியத்தகு சாதனையொன்றைமிகிர் சென் நிலைநாட்டியிருக்கிறார் என்றும் இப்படியான வீரர்கள் குறித்து தமிழகம் பெருமைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

### பேர்லின் சுவர்

லண்டன், ஏப். 7

ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு பேர்லின் சுவர் இன்று திறந்துவிடப்பட்டது. இதன்மூலம் மேற்கு பேர்லின் வாசிகள் கிழக்கு பேர்லினிலுள்ள தங்களது உறவினர்களைச் சந்தித்து வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சுவர் இருவாரங்களுக்குத் திறந்து வைக்கப்படும்.

மொத்தம் 5,81,384 மேற்குபேர்லின் வாசிகள் இதற்கான அனுமதிகளைப்பெற்றுள்ளனர். பேர்லின் சுவரைக் கடக்க 61,697 கார்களுக்கும் அனுமதி கிடைத்திருக்கிறது.

(பி. டி. ஐ.)

# மேற்கு வங்காள ஹர்த்தால்

## அமைதியாக நிகழ்ந்ததற்கு முதன் மந்திரி பாராட்டு

கல்கத்தா, ஏப். 7

மேற்கு வங்காளத்தில் நேற்று இடது சாரித்தலைவர்கள் கூட்டாக அனுஷ்டித்த ஹர்த்தாலின்போது பாரதூரமான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவில் ஒரு பொலிஸ் ஜீப் தாக்கப்பட்டதில் ஆறு பொலிசார் காயமடைந்தனர் என்றும் ஒரு சிறுவன் பொலிஸ் ஜீப்பில் அகப்பட்டு மரணமானுன் என்றும் அறிவிக்கப்பட்டது.

உணவுப் பங்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்று கோரி இவர்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

பொதுவாக கல்கத்தாவிலும் மற்றும் பல இடங்களிலும் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. தொழிற்சாலைகளில் வழமைபோல வேலை நடைபெறவில்லை. கல்கத்தாவிலிருந்துப் அதற்கூடாகவும் செல்லும் விமானச் சேவைகள் நேற்று ரத்துச்செய்யப்பட்டிருந்தன. பஸ், ட்ராலி, ரயில் சேவைகள் வழமைபோல நடைபெறவில்லை.

### துப்பாக்கிகள் பறிமுதல்

கல்கத்தாவின் ஆறு இடங்களில் நேற்றுப் பொலிஸார் நடத்திய 'வேட்டை' யில் ஏராளமான வெடி மருந்துகளும் சுழல்துப்பாக்கிகளும், கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது, லைசென்ஸ் இல்லாமல் இவை உபயோகத்தில் இருந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்குவங்காள முதன் மந்திரி நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில், பலாத்காரச் செயல்களில் ஈடுபடாமல் அமைதியான முறையில் ஹர்த்தாலை அனுஷ்டித்ததற்காக இடது சாரித்தலைவர்களுக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

# அமெரிக்கயுத்தத்துக்கு தயாராகுங்கள்

## சீன பத்திரிகை அறிவிப்பு

ஹொங்கொங், ஏப். 7

அமெரிக்காவுடன் போரிடத் தயாராகுமாறு சீனமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் சீன பத்திரிகையான ''மக்கள் தினசரி'' யில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

''யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் இதனை விரும்புகின்றனர். ஆனாலும் இந்த யுத்தத்தைச் சமாளிக்க நாம் தயாராக வேண்டும். யுத்தம் சிறிதளவாகவும் இருக்கலாம். எதற்கும் நாம் இப்பொழுதே தயாராக வேண்டும். அமெரிக்காவின் யுத்த பயமுறுத்தலை சீன ஏற்றுக் கொண்டிருக்கிறது.

(பி. டி. ஐ.)

தென் வியட்னுமில்

# இவ்வருடத்துக்குள் பொதுத் தேர்தல்

## டானுங்கிலிருந்து துருப்புகள் வாபஸாகின

சைகோன், ஏப். 7

**தென் வியட்னுமில் இவ்வருடத்துக்குள்ளாக பொதுத் தேர்தல் நடைபெற்று சிவில் அரசாங்கம் ஒன்று பதவியேற்கும் என்று தென்வியட்னும் பிரதமர் ஏர் மார்ஷல் கை உறுதிதெரிவித்துள்ளார்.**

டானுங் சென்று திரும்பிய தென்வியட்னும் பிரதமர் நேற்று சைகோனில் பிரபல மதத்தலைவர்களுடனும் அரசியல் தலைவர்களுடனும் இதுபற்றி பேச்சுக்கள் நடத்தினுர்.

ஐந்துமாத காலத்தில் அரசியல் நிர்ணய சபையொன்றை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் கை ஏற்றுக்கொண்டுள்ளதைத்தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிவடைந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

அரசியல் சாஸனத்தை வரைவது சம்பந்தமான பேச்சுக்கள் அநேகமாக ஒரு வாரகாலத்தில் நடைபெறலாமென்று அரசியல்பார்வையாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் தென் வியட்னுமின் பலபகுதிகளிலும் நடைபெற்று வந்த மாணவர் ஆர்ப்பாட்டம் ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. சைகோனில் ஒரு பத்திரிகைக் காரியாலயம் தாக்கப்பட்டதைத் தவிர வேறு சம்பவங்கள் எதுவும் நேற்று நிகழவில்லை.

### துருப்புக்கள் வாபஸ்

டானுங் அனுப்பியிருந்த தென்வியட்னும் அரசாங்க துருப்புக்கள் நேற்று வாபஸ் பெறப்பட்டன.

# கல்கத்தாவில் அமைதியான ஹர்த்தால்

கல்கத்தா, ஏப். 6

கல்கத்தாவில்இன்றுஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு இடதுசாரிகள் விடுத்தகோரிக்கை அமைதியான முறையில் நடைபெற்றது.

கடைகள் மூடப்பட்டிருந்தன. அத்தியாவசிய சேவைகள் மாமூலாக நடைபெற்றன.

4 இடங்களில் போக்குவரத்துக்குப்போடப்பட்டிருந்த தடைகள் மக்களாலேயே அகற்றப்பட்டன.

டார்ஜிலிங்கிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன.

முன்னேற்பாடாக ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன. 6 நீண்டதூர ரயில்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

அசம்பாவிதங்களைத் தவிர்க்கும்பொருட்டு விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டன.

மேற்குவங்க உணவுக் கொள்கையை எதிர்த்து இடதுசாரிகள் இன்று ஹர்த்தால் கோரிக்கை விடுத்தனர்.

ஏர் இந்திய விமான

# நெவிகேட்டர்கள் வேலைநிறுத்தம் முடிவடைந்தது

புதுடில்லி, ஏப்ரல் 7

பத்தொன்பது தினங்களாக வேலைநிறுத்தம் செய்த ஏர்இந்திய நெவிகேட்டர்கள் தங்களது வேலைநிறுத்தத்தை நேற்று முடித்துக் கொண்டனர். இன்றிரவிருந்து ஏர் இந்திய விமானச் சேவைகள் மீண்டும் வழமைபோல் இயங்கத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தைக் கைவிடாதபட்சத்தில் இவர்களுக்கு முன்னர் வேலைநீக்க உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன.

வேலைநிறுத்தத்தை நிறுத்துமாறு பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி, போக்குவரத்து சிவில் விமானச் சேவை மந்திரி ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வேலைநிறுத்தம் செய்த நெவிகேட்டர்கள் யூனியன் தலைவர் இதுபற்றித் தெரிவிக்கையில், தங்களது கோரிக்கைபற்றி பரிசீலனை செய்வதாக பிரதமமந்திரி தெரிவித்திருந்த உறுதிமொழியைத் தொடர்ந்து தாங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டதாகக் கூறினர்.

### வடவியட்னுமுக்கு செய்தி

கெய்ரோ, ஏப். 7

வடக்கு வியட்னுமுக்கான ஐக்கிய அரபுக் குடியரசு தூதர் திரு. ஸகாறியா அட்லி, வடக்கு வியட்னும் அதிபர் ஹோ-சி-மின்னுக்கு செய்தியொன்றை வழங்குவார்என்று ''அல் அஹ்ரம்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இச்செய்திபற்றிய விபரம் வெளியிடப்படவில்லை.

(பி. டி. ஐ.)

### உதவி மந்திரி விஜயம்

சாவகச்சேரி, வியா.

தேசியமயசேவை விளையாட்டு அமைச்சின் உதவி மந்திரி திரு. டீ. பி. வெலகெதர இம்மாதம் 18-ந் தேதி யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயஞ் செய்வாரென அறியப்படுகிறது.

# தலைமறைவு நாகர் கோஷ்டியுடன் பிரதமர் மீண்டும் பேச்சுக்கள்

## நாளை ஆரம்பம்

புதுடில்லி, ஏப்ரல் 7

தலைமறைவுநாகர் கோஷ்டிக்கும் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்குமிடையே நாளை மறுதினம் சனிக்கிழமை பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியுடன் நாகலாந்து முதன் மந்திரி, அஸாம் முதன்மந்திரி, நாகலாந்து அமைதிக்கோஷ்டியைச் சேர்ந்த வண. மைக்கல் ஸ்கொட் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

தலைமறைவுநாகர் கோஷ்டியில் மூவர் இருப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 9-ம் திகதியிலிருந்து 12-ம் திகதிவரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜோன்ஸனின் 35 லட்ச தொன் உணவு தானிய உதவி

## இந்தியாவுக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படும்

வாஷிங்டன், ஏப்ரல் 7

இந்தியாவின் உணவு நெருக்கடியை ஓரளவு சமாளிக்கும்வகையில் 35 லட்சம் தொன் உணவுதானியமளிக்கும் அதிபர் ஜோன்ஸனின் அவசர உணவுத்திட்டத்தை அமெரிக்க செனட் சபை நேற்று ஏகமனதாக அங்கீகரித்தது.

அமெரிக்க அதிபர் ஜோன்ஸனின் இக்கோரிக்கைக்கு அமெரிக்க பாரிலிமெண்ட் ஏற்கனவே அங்கீகாரம் வழங்கி இருக்கிறது.

இந்த உணவு தானியத்தை இந்தியாவுக்குவிரைவாக அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

முப்பத்தைந்து தொன் உணவு தானியத்துள் சோளம், புகையிலை, பருத்தி ஆகியவற்றை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள்

# உணவுக் கமிஷனர்மீது வழக்கு!

## வருமானவரி இலாகாவுக்கு கணக்கு விபரம் காட்டவில்லையாம்

கொள்ளுப்பிட்டி, புதன் முன்னாள் உணவு கமிஷனர் திரு. கே. எம். டி. ஜயநெட்டிக்கு எதிராக வருமானவரி இலாகா வழக்கொன்றை கொழும்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளது.

1961-62-க்கான கமிஷன் மதிப்பீட்டில் ரூ 12,126 யை வருமான வரி இலாக்காவுக்குக் காட்டவில்லையென இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் விசாரணைக்கு இன்று எடுத்துக் கொள்ளப் பட்ட இவ்வழக்கு விசாரணையில், முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் திரு. கே. கனகசுந்தரம் திரு. ஜயநெட்டி மீதான குற்றச்சாட்டை கூறினார்.

திரு. ஜயநிதி உணவுக் கமிஷனராக இருந்த போது பிறேசிலிலிருந்து சீனி பெற்றுக் கொண்டாரென்று, அப்போது கிடைத்த சில கமிஷன்களை சுவிற்சர்லாந்து வங்கியில் போட்டிருந்தாரென்றும், அந்தக் கமிஷன் விபரங்களை காட்டவில்லையென்றும் முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தில் எடுத்துக் காட்டினார்.

முன்னர் நடந்த இலாக்கா விசாரணையில் திரு. ஜயநெட்டி இதனை ஒப்புக் கொண்டிருந்தாரென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

திரு. ஜயநெட்டியின்சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், இலாகா விசாரணையில் திரு. ஜயநெட்டி ஒப்புக்கொண்டது இங்கு சாட்சியத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறினார்.

உயர்தர மதிப்பீட்டதிகாரி திரு. எச். ஜே மித்திரசேன சாட்சியமளிக்கையில், கிடைத்த சில தகவல்களைக்கொண்டுதிரு. ஜயநெட்டியின் வீட்டைச் சோதனையிட்டபோது, சில முக்கிய தஸ்தாவேஜுகள் கிடைத்தனவென்றும் ஒரு வருஷத்துக்கு 2 லட்சம் ரூபா வீதம் ஐந்து வருடத்துக்கு திரு. ஜெயநெட்டி கமிஷன் பெற்றிருக்கிறார் என்பது தெரியவந்ததென்றும் தெரிவித்தார்.

விசாரணை ஜூன் 3-ம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டது. ——

## சாரதி விடுதலை

மாவிட்டபுரம், வியா.

ஏழாலையைச்சேர்ந்தசிதம்பரப்பிள்ளை சிவகுரு என்பவர் சென்றவருடம் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி மோட்டார்க்காரை கவலையீனமாக ஓட்டிச்சென்று புங்குடுதீவைச்சேர்ந்த திருமதி தெய்வானை முத்தையா என்பவரை இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் வைத்து அடித்துக் கொலை செய்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதபதி திரு. ஜி. எவ். எச். அத்துறு பாறு முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி விசாரணை முடிவில் கார்ச் சாரதியான எதிரியைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலைசெய்தார். எதிரிதரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். காங்கேசன்துறைப பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி வழக்கை நடத்தினர். —

## வவனியாவில் புதிய பஸ்நிலயம்

வவனியா, புதன்

வவனியாவில் சகல வசதிகளுடனும் புதிதாக அமைக்கப்பட்டுவரும் புதிய நவீன பஸ் நிலையம் இம்மாதம் 9-ம் திகதி திறந்து வைக்கப்படுகிறது.

## வாலிபமுன்னணி புத்தாண்டுவிழா

பருத்தித்துறை, வியா.

கரவெட்டி தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணியினர் புதாண்டுவிழாவைக் கொண்டாட ஏற்பாடுசெய்து வருகின்றனர்.

விழாவையொட்டி 14-ம், 15-ம திகதிகளில் பல்வேறு தேசிய விளையாட்டுப் போட்டிகளையும் இயந்திரக் கலப்பைகளின் ஊர்வலம், மாட்டுச்சவாரி முதலியவைகளையும் நடாத்தவிருக்கின்றனர். ——

## தீவுப்பகுதி கலாமன்றம்

ஊர்காவற்றுறை, வியா.

தீவுப்பகுதி கலாமன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் வேலணை அரசினர் மத்தியகல்லூரி மண்டபத்தில் திரு. பி. கேதாரநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பாதுகாவலர்கள்: தீவுப் பகுதி காரியாதிகாரி, தீவுப் பகுதி எம். பி., மத்திய கல்லூரி அதிபர் திரு. சிவ சிதம்பரம், தலைவர்: திரு. பி. கேதாரநாதன், இணைக் காரியதரிசிகள்: திரு. எஸ். வரதலிங்கம், திரு. பி. சந்திரசேகரம் தனதிகாரி: திரு. கே. நாகராஜா.

——

## பயிர்ச் செய்கைக் குழுக் கூட்டம்

ஊர்காவற்றுறை, வியா.

சரவணைபயிர்ச் செய்கைக் குழுவின் தேர்தல்கூட்டம் கமத்தொழில் சேவைப் பகுதி அதிகாரி தலைமையில் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெற்றது. விவசாயிகள் பலர் இக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்னர்.

நெற்காணிச்சட்டத்தின் பிரகாரம் கூட்டப்படும் குழுவின் இரண்டாவது தேர்தலில் பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்படடனர்.

தலைவர் திரு. த. திருநாவுக்கரசு, காரியதரிசி திரு. கு. பத்மநாதன், தனதிகாரி திரு. என். நாகராசா. பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிந்த செல்வி இந்திரமதி பாலசிங்கத்துக்கும் மலாயா பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கந்தசுவாமிப்பிள்ளைக்கும் சமீபத்தில் வெகுசிறப்பாகத் திருமணம்நடைபெற்றது. மணமக்களைப் படத்தில் காணலாம்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வன்னேரிக்குளப்பகுதி கிராம சேவகராகக் கடமையாற்றிவந்த திரு. பி. எச். ஜூலியஸ் இம்மாதம் முதல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்குப் பகுதிக்கு இடமாற்யம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கு கடமையாற்றி வந்த ஜனப் எஸ். ஏ. ரசீன் ஓய்வு பெற்றுள்ளார்.

ஈழநாடு ——

## சூறுவளி நிவாரண மாத உதவித்திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஈழநாடு' சூறுவளி நிவாரண மாத உதவித்திட்டத்தின்கீழ் சித்திரை மாதத்துக்கான தமது உதவிப் பணத்தை (ரூ. 25) நெல்லியடியைச் சேர்ந்த அன்பர் அனுப்பியுள்ளார்.

## குடும்பக்கட்டுப்பாடு

### மந்திரி விளக்கம்

கொழும்பு, வியாழன்

'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்பற்றி சிங்களமக்களிடையே தவறான அபிப்பிராயம் நிலவி வருகிறது. இது சிங்களமக்கள் தொகையைக் குறைத்துவிடுமென்றும் இதனால் தமிழரின் ஜனத்தொகை அதிகரித்துவிடலாமென்றும் தவறாக எண்ணப்படுகிறது.'

இவ்வாறு சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன பாதுக்கையில்புதியகுடும்பக்கட்டுப்பாட்டு நிலையமொன்றை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்ப் பகுதிகளிலும் குடும்பக்கட்டுப்பாட்டு நிலையங்கள் திறக்கப்படுகின்றன. எனவே சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் அபிப்பிராயம்அர்த்தமற்றது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாட்டில் நன்கு அமுல்நடத்தத்தாம் விரிவான ஏற்பாடுகள் செய்ய விருப்பதாகவும் மந்திரி தெரிவித்தார்.

——

## புதுவருட உத்தியோகத்தர்கள்

கொழும்பு, வியா.

சங்கீத நாட்டிய சங்கத்தின் பத்தாவது வருடாந்தக்கூட்டம் சரஸ்வதிமண்டபத்தில் நடைபெற்றபோது கிழ்க்கண்டோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். நடராசா, உபதலைவர்கள் திருவாளர்கள் ஏ. எச். ராஜகொத்வாலா, எம். சுப்பிரமணியம், பொதுக்காரியதரிசி திரு. எஸ் மகாலிங்கம், உதவிக் காரியதரிசி திரு. ஆர். பொன்னுராசா, தனதிகாரி திருமதி எல். செல்வதுரை, நடனக்காரியதரிசி திருமதி ஐ. மகாதேவா, நாடகக்காரியதரிசி திரு. கே. தனபாலசிங்கம், சங்கீதக்காரியதரிசி திருமதி எஸ். தனபாலசிங்கம்.

செல்வி எஸ். முத்துவேலு திரு. ஆர். சிறிகாந்தன், திரு. ஆ எஸ். செல்வநாயகம் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

# பல்கலைக்கழகவெளிவாரி மாணவர் கழகம் அமைத்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழக வெளிமாணவர் கழகத்தின் ஆரம்பப் பொதுக்கூட்டம் நேற்று முற்பகல் திரு. க கதிரேசு தலைமையில் நடைபெற்றது.

இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி தமிழ்மாணவர் கழகமொன்று அமைய வேண்டியதன் அவசியம் பற்றியும், அவ்வாறு வெளிவாரி மாணவர் கழகம் ஒன்று அமையும்பட்சத்தில் அவை சாதிக்கக்கூடிய கருமங்கள் பற்றியும் ஆராயப் பட்டன. பல்கலைக்கழக ஆட்சிச்சபையுடனும், துணைவேந்தர், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், தலைமைப்பீடாதிபதிகள் என்பவர்களுடனும் தொடர்புகொண்டு வெளிவாரி மாணவர்களுடைய கல்விக்கு ஆவன செய்வதைப்பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்திற்கு வெளியிலேயிருந்து கல்விகற்கும் மாணவர்கள் உபந்நியாச வசதி, நூல் நிலைய வசதி, என்பன இன்றிக்கஷ்டப்படுகிறார்கள். இவற்றிற்கான நிவாரணங்களை பல்கலைக்கழக ஆட்சிச்சபையுடனும் விரிவுரையாளர்களுடைய [illegible] ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென்று திரு. ச. கதிரவேலு குறிப்பிட்டார். இவ்வியக்கம் அரசியல், மத, இன சார்பற்ற கல்விவளர்ச்சிக்குரிய இயக்கமாக இருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்த தற்காலிக தலைவர் திரு. ச. கதிரவேலு பேசுகையில் இவ்வியக்கம் செவ்வனே தொழிற்படுமாயின் பல்கலைக்கழக ஆட்சிச்சபையும் விரிவுரையாளர்களும் அரசாங்கமும்கூட எங்களுக்கு ஏற்ற உதவிகளைச் செய்யத் தயாராக இருக்குமெனக் குறிப்பிட்டார்.

செயற்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு. க. கதிரவேல், காரியதரிசி: திரு. ச. கதிரவேல், உபதலைவர்கள்: வித்துவான் ச. கந்தசாமி, திரு. க. நடராசா, திரு செ ஐயாத்துரை, உபகாரியதரிசி: திரு. த. சண்முகநாதன், தனதிகாரி: திரு. சூ. பிரான்சீஸ், நிர்வாகஅங்கத்தவர்கள்: திருவாளர்கள் ஏ. தருமலிங்கம், நா. கணபதிப்பிள்ளை, சீ. நவரத்தினம், சி. சிவானந்தம், க. சொக்கலிங்கம், செ. நடராசா, இ. அந்தோனிப்பிள்ளை, க.சிற்றம்பலம்.


## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

உடும்பராய்
பழைய காட்டு வைரவர்
கோவில்

## பொங்கல் திருநாள்

உரும்பராய்பழையகாட்டு வைரவர் கோவிலில் நடைபெறும் வருடாந்தப் பொங்கல் திருநாள் வழமைபோல் திகழும் பங்குனி மாதம் 30-ம் திகதி (12-4-66) செவ்வாய்க்கிழமைஇரவும், பூசை புதன்கிழமை காலையும் நடைபெறுமென்பதைப் பொதுமக்களுக்குத் தெரியத்தருகின்றோம்.

இப்படிக்கு
கோவில் முகாமையாளர்கள்,
பொன்னம்பலம்-மாணிக்கம்.
114

---

பண்டத்தரிப்பு
இந்துக்கல்லூரி பழைய
மாணவர் சங்கம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

10-4-66 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணியளவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில்நடைபெறும் பழைய மாணவர் இதனை அழைப்பாய் ஏற்று வருகைதரும்படி வேண்டுகிறோம்.

ச. நாராயணன்.
தி. வ. அரியரத்தினம்
(இணைச்செயலாளர்கள்)
பண்டத்தரிப்பு.
6-4-66 111

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோர்ட்டில்

1 புலோலி தெற்கு வல்லியப்பர் ஆறுமுகமும்
2 ஷெயூர் பெண் வல்லியப்பபிள்ளையும்
3 ஷெயூர் வல்லியப்பர் ஆறுமுகம் மகள் சரஸ்வதி சிறுபராயமாயிருப்பதால் அவளின் பிதா குறித்த வல்லியப்பர் ஆறுமுகம் மூலமாக

—வழக்காளிகள்

இல. 8947

எதிராக

1 புலோலி தெற்கு சிதம்பரப்பிள்ளை இராமலிங்கம் கைம்பெண் நாகமுத்து
2 ஷெயூர் சின்னத்தம்பியார் சுப்பிரமணியமும்
3 ஷெயூர் பெண் இலட்சுமியும்
4 ஷெயூர் கதிர்காமு கந்தையாவும்
5 ஷெயூர் பெண் தங்கமுத்துவும்
6 ஷெயூர் நாராயணர் வலலிபுரம்

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி மேற்கு வென்றிபாகுதேவன் குறிச்சி இறைகொளுவனோயாவத்தை நிலபபரப்பு 10 8/3 என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின்16ம் இலக்க பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1966-ம் ஞூ சித்திரை மீ 9-ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின்
கட்டளைப்படி
(ஒப்பம்) மு. ஸ்ரீபத்மநாதன்
பிரதமலிகிதர்.

1966-ம் வருஷம்
மாசி மீ 22ம் திகதி. 113

---

# சென்னை கோஷ்டியின் தரமான விளையாட்டு

கொழும்பு, வியாழன்
சென்னைக் கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்குமிடையே ஓவல் மைதானத்தில் நடைபெற்றுவரும் ''கோபாலன் கேடயத்துக்கான'' கிரிக்கெட் போட்டியில் சென்னைக் கோஷ்டி மகத்தான வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு நல்லதொரு விருந்தையளித்த சென்னைக் கோஷ்டியினரின் கிரிக்கெட் ஆட்டம் சிறப்பாக அமைந்திருந்தது. துடுப்பெடுத்தாடுவதில் மட்டுமன்றி பந்து வீசுவதிலும் அவர்கள் தரமாகவிருந்ததே இதற்குக் காரணமாகும். ஒரு நிமிடத்துக்கு ஒரு ஓட்டம் என்ற முறையில் ஓட்டங்களை விளாசித்தள்ளிய சென்னை கிரிக்கெட் கோஷ்டியினரே இம்முறை 'கோபாலன்' கேடயத்தை பெறுவார்கள் என்று நம்பலாம்.

### சென்னைக் கோஷ்டி

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை கோஷ்டியினர், சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 398 ஓட்டங்கள் பெற்றனர், இதில் எஸ். சிங் 89 ஓட்டங்களையும் எப். ஜகதீஸ் 80 ஓட்டங்களையும் பி. கே. தர்மலிங்கம் 73 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றிருந்தனர். இலங்கையைப் பொறுத்தமட்டில் பிறட்றிக் மூன்று விக்கட்டுகளையும் டுனுவில இரண்டு விக்கட்டுகளையும் தென்னக்கோன் இரண்டு விக்கட்டுகளையும் சண்முகம், விமலரத்ன ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கட்டையும் வீழ்த்தியிருந்தனர்.

### இலங்கை கோஷ்டி

இதனைத் தொடர்ந்து இலங்கைகிரிக்கெட்கோஷ்டி விளையாடியதில் தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஏ. தென்னக்கோன் 45 ஓட்டங்களும் என். சண்முகம் 30 ஓட்டங்களும் என். பிறட்றிக் 16 ஓட்டங்களும், சி. ஈ. றெயிட் 11 ஓட்டங்களும் கூடுதலாக எடுத்திருந்தனர். 18 ஓட்டங்கள் நஷ்டத்தில் 2 விக்கட்டுகளையும் 19 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு மூன்றாவது விக்கட்டையும் 48 ஓட்டங்களை ஐந்து விக்கட்டுகளையும் இலங்கைக் கோஷ்டியினர் இழந்தது ஒரு துர்ப்பாக்கியமென்றே சொல்லலாம். இந்த இனிங்ஸில் சென்னைக் கோஷ்டியைச் சேர்ந்த வெங்கடராகவன் 48 ஓட்டங்களில் 4 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தது ஒரு 'சாதனை' யாகும். பி. ரூவ், வி. வி. குமார் ஆகியோர் முறையே 3, 2 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தனர்.

இலங்கைக் கோஷ்டியினர் தங்களது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்து

6-ம் பக்கம் பார்க்க

# ரேயல் கிரிக்கெட் கோஷ்டியின் விளையாட்டு சோபிக்கவில்லை

யாழப்பாணம்,வெள்ளி

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கும் கொழும்பு ரேயல்கல்லூரிக்குமிடையே யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரண்டுநாள் கிரிக்கெட்போட்டி, வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது. மத்தியகல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 110 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்ஸில் ஒன்பது விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 195 ஓட்டங்களும் எடுத்தது. ரேயல்கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் ஒன்பது விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 157 ஓட்டங்களும் இரண் இனிங்ஸில் (ஆட்டநேரம்வரை) ஆறுவிக்கட்டுகள் நஷ்டத்துக்கு 89 ஓட்டங்களும் எடுத்தது,

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிநாள்போட்டி கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரிதும் விறுவிறுப்பைக் கொடுத்திருந்தது. இதற்கு மத்தியகல்லூரி கிரிக்கெட் வீரர்கள் பாலேந்திராவையும் கணேசகுமாரையும் காரணங்களாகக் கூறலாம்.

ரேயல் கல்லூரி தனது முதல் இனிங்ஸில் 157 ஓட்டங்கள் பெற்றிருந்தது. இதில் காப்டன் தளையசிங்கம் 41 ஓட்டங்களை எடுத்திருந்தது குறிப்பிடத் தக்கது. இரண்டாவது இனிங்ஸில்; ஆட்டநேரம்வரை ரேயல் 89 ஓட்டங்களை எடுத்தது. இந்த இனிங்ஸில் கிரிக்கெட்வீரர் பிருன்லிவஸ் 31 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்றிருந்து ஒரு 'அப்பளாஸ்' வாங்கிவிட்டார்.

### சிறப்பான ஆட்டம்

மத்தியகல்லூரியைப் பொறுத்தமட்டில், நேற்று முன்தினம் ஆட்டம்மிகவும் பாராட்டக்கூடியதாக அமைந்திருந்தது. மூன்றாவது விக்கட் நஷ்டத்தில் இருபது ஓட்டங்களைப்பெற்றிருந்த இக் கோஷ்டி, 4-விக்கட் நஷ்டத்தின்போது 110 ஓட்டங்களைப் பெற்றது ஒரு 'சாதனை' என்றே சொல்லலாம்.

கணேசகுமாரும் பாலேந்திராவும் பொருத்தமான

(6-ம் பக்கம் பார்க்க)


## பிரவேசங்கள்

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப்: விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

ஐக்கியகலாசாலை
நெல்லியடி, கரவெட்டி/
107, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


# வரி விளம்பரம்

### தேவை

எமது தயாரிப்பிலுள்ள பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆண் - பெண் விற்பனையாளர்கள் தேவை. 13—4—66க்குமுன் வரவும். பாஸ்கரன் இன்டஸ்றீஸ் 44/3 கொலிஸ் லேன், நீர்வாவியடி, யாழ்ப்பாணம். (வசந்தா சேலை அச்சகத்துக்கு அருகாமை). 43

---

ஆனையிறவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு பயிற்றப்பட்ட மனேச்சர் தேவை. பிணைப்பணம் ரொக்கம் 1000/-. ஆதனப் பிணை 2000/- வேதனம் சகலபடிகளும் உட்பட 90/- விண்ணப்பப் பத்திரம் 12-4-66 க்குள் இச்சங்கத்தின் தலைவர் அல்லது காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். இப்படிக்கு கௌரவ காரியதரிசி, ஆனையிறவு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், ஆ. மூத்ததம்பி. 34

---

கொந்தருத்து முறையில் கொழும்பில் உழவு மெசின் ட்ருக்டரில் மண் எடுத்துச் செல்வதற்கு ட்ருக்டர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் லாறிகள் ட்ருக்டர் லைசென்ஸ் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அத்துடன் ரொக்கமாக பிணைப் பணமும் கட்டவேண்டும். விபரங்களுக்கு கே. சண்முகம், 86, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டியா. 39

### தேவை

விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம். 37

---

மில் வேலைகளில் தேர்ச்சி பெற்ற இருவர் தேவை. நேரில்வரவும். தேவி மில்ஸ். தொண்டைமானாறு. 38

---

50,000 ''சி'' தர சாக்குகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு 16-4-66 மாலை 4 மணிக்கு முன்னர் காரியாலய நேரத்தில் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். காரியதரிசி, வ. ப. வி. உ. கூ. சமாஜம், 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 21

---

கொழும்பில் ட்ருக்டர்கள் லோடேர்ஸ், புல்டோர்சேர்ஸ் முதலியவற்றில் வேலைசெய்வதற்கு மெக்கானிக்குகள் தேவை. பிரசித்தி பெற்ற ஸ்தாபனங்களில் வேலைசெய்து பல கால அனுபவம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். விபரங்களுக்கு கே. சண்முகம்,86, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டியா, 40

---

கொந்தருத்து முறையில் கொழும்பில் வேலைசெய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் ரொக்கமாக பிணைப் பணம் கட்டவேண்டும். கே. சண்முகம், 86, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டியா. 41

---

வாகனங்கள் திருத்துவதற்கு மின்நுட்பத் தொழிலாளர் தேவை. விபரங்களுக்கு கே. சண்முகம், 86, அவிசாவளைவீதி, வெல்லம்பிட்டியா 42

---

கொழும்பிலுள்ள ஒரு தமிழரின் குடும்பத்துக்கு அனுபவமுள்ள சமையல் பெண் தேவை. தகுந்த ஊதியம் அளிக்கப்படும். விளம்பர இல. 30, ஈழநாடு மே. / பா. என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

---

மாங்குளம் ஸ்டேசன் ரோட்டில் இரும்புச் சாமான்கள் தளபாடங்களுடன் விற்பனைக்கு இருக்கின்றன. விரும்பியவர்கள் நேரில் வந்து சந்திக்கவும். இ. ஆ. சுப்பிரமணியம். 27


ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
பாரத நாட்டின்
வீரபுத்திரன்
4-45க்கு மட்டும்
MY SIX LOVES

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ் ஆர். - விஜயகுமாரி
நடித்த
தெய்வத்தின் தெய்வம்

REGAL—JAFFNA
NOW SHOWING!
JORGE MISTRAL
GIANNA MARIA CANALE
in
THE SWORD
AND THE CROSS

இப்பொழுது திரையிடப்படுகிறது!
புத்தாண்டு வெளியீடு
கிங்ஸ்லி பிளாசா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா ஸ்ரீகிருஷ்ணா மொடேர்ன்
(மட்டக்களப்பு) (திருகோணமலை) (பதுளை)
மொடேர்ன் விஜிதா தீவொளி
(பண்டாரவளை) (ஹட்டன்) (நுவரெலியா)
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(9 மாறுபட்ட வேடங்களில்)
சாவித்திரி
நடித்திருக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி
இசை: கே. வி மகாதேவன்
கதை, வசனம் ஏ. பி. நாகராஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்துவின் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### பரிவட்டத் துணி யின் பிரயாணங்கள்

காலத்துக்குக்காலம் இப்பரிவட்டத்துணி வெவ்வேறு இடங்கட்கு கொண்டுசெல்லப்பட்டதற்கு சான்றுகள் உண்டு. சில காலத்துக்கு ஜெருசலேமுக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் சிலுவைப் போர்கள் காலத்தில் பிரான்ஸ்தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இத் துணி வைக்கப்பட்டிருந்த தேவாலயம் 14-ம் நூற்ருண்டில் தீக்கிரையான போது யோபெறிவுர்ணி என்பவன் தனதுஉயிரையும் மதியாது ஆலயத்துள் சென்று இப்பொருளை இரகசியமாகத் திருடி வீரே ஆலயத்தில் கொண்டுசென்று காப்பாற்றினன்.

பின்னர் அரசியற் புரட்சிகளினுல் பிரான்ஸ் அலைக்கழிந்தபோது பாதுகாப்புக் கருதி கிறிஸ்துவின் பரிவட்டத்துணி வெவ்வேறிடங்கட்கு கொண்டுசெல்லப்பட்டது. இறுதியாக பாப்பரசர் சிக்ஸ்துஸ் அவர்களின் தீர்மானத்துக்கிணங்க இத்தாலியில்ரியுறன்தேவாலயத்திற்கு இப் பரிவட்டத்துணி கொண்டுசெல்லப்பட்டு அங்குதானே இன்றளவும் காப்பாற்றப்பட்டுவருகின்றது.

### ஆராய்ச்சிகள்

பரிவட்டத்துணியில் தெரியும் மங்கலான உருவத்தை வரைய முயன்றும் பிரபல ஓவியர்கள் பலர் தோல்வியடைந்தனர். இவ்விதமிருக்க பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் புதைபொருளாராய்ச்சியில் ஈடுபாடுடைய இத்தாலிய வழக்கறிஞரொருவர் பரிவட்டத் துணியில் தோன்றும் உருவத்தைப் படம் பிடித்து உலகுக்குக் காட்ட விரும்பினுர்.

ரியூறின் தேவாலய கட்டளைக் குரவரின் அனுமதி பெற்று நவீன புகைப்படப் பிடிப்புக் கருவிகளுடன் பல கோணங்களில் வெகு நுட்பமாகப் படம் பிடித்தார். பிடித்த படங்களைக் கழுவும் போது நெகடிவ் உருவங்கட்குப்பதிலாக் பொசிற்றிவ் உருவங்களே கிடைத்தன இதிலிருந்து ஒரு உண்மை புலனுகியது. பரிவட்டத் துணியில் கிறிஸ்துவின் உருவத்தை எவரும் வரைந்திருக்க முடியாது. அவ்விதமானுல் நெகடிவ் படங்களே முதலில் காணப்பட்டிருக்கும்.

இப் படப் பிடிப்பால் விளைந்த நன்மைகள் பல. பத்திரிகைகளில் இப் போட்டோ ப்படங்களை பல கோணங்களிலும் பிரசுரித்தன. உலக விஞ்ஞானிகள் பலர் இப்படங்களை ஆராய்ந்து பல உண்மைகளை எடுத்துக்கூறினர்.

(1) பரிவட்டத்துணியில்பதிந்துள்ள உருவம் மைக்கல் அஞ்சிலோ போன்ற பிரபல ஓவியர்களால் வரையைப்பட்டதல்ல. அது ரோமானியஆட்சிக்காலத்தில் அதாவது கிறிஸ்துவின் காலத்துக்குரியதொன்று.

(2) பரிவட்டத்துணியின், முன்புறமும் பின்புறமுமாகக் காணப்படும் உருவச்சாயல் ஒரே மனிதரின் தோற்றம்தான்.

(3) இரு படங்களையும் கொண்டு இதில் காணப்படும் மனிதரின் உயரத்தை சுமார் ஆறடி உயரமுள்ளவரென மதிப்பிடக்கூடியதாயுள்ளது.

(4) கிறிஸ்துவின் கம்பீரமான தோற்றத்தையும் முகபாவனையையும் பரிவட்டத் துணியின் முகப் பதிவு எடுத்துக் காட்டுகின்றது.

(5) கிறிஸ்துவின் மணிக்கட்டில்தான் ஆணியடிக்கப்பட்டிருந்தல்வேண்டுமென இப்பரிவட்டத்துணியில் தோன்றிய கைகளின் ஆராய்வினுல் உறுதிப்படுத்தப்பட்டது.

(6) கசையடிக் காயங்கள் சிலவற்றை உருவச்சாயலில் இருந்து காணக்கூடியதாய் உள்ளது. அதிலிருந்து கசையடியின் தன்மையையும் கொடூரத்தையும் நன்கு மதிப்பிடலாம்.

இன்று ரிரிறன் நகரின் மிக உன்னத தேவாலயமொன்றில் மாபிள் கற்களாலான அழகிய பீடத்தில் கிறிஸ்துவின் பரிவட்டத் துணி காப்பாற்றப்பட்டு வருகின்றது.

## ரேயல் கிரிக்கெட் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் 'ஜோடி' சேர்ந்து ஓட்டங்களை விளாசித்தள்ளினர். சோர்வடைந்திருந்த கிரிகெட் ரசிகர்களுக்கு இவர்களுடைய ஆட்டம் ஒரு உற்சாகத்தை அளித்துவிட்டதென்றே சொல்லவேண்டும். கணேசகுமார் விறுவிறு என்று 48 ஓட்டங்களையும் பாலேந்திரா 64 ஓட்டங்களையும் விளாசித்தள்ளி 'சபாஷ்' பெற்றுக் கொண்டனர். 'ஆல்ரவுண்டர்' கணேசகுமாரின் நேற்றைய விளையாட்டு அபாரம். மத்திய கல்லூரியைப்பற்றிய மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சம்; சண்முகலிங்கம் 35 நிமிடங்களில் 38 ஓட்டங்களைப் பெற்றிருந்ததாகும். மற்றைய வீரர்களான நடராசா, பற்குணராசாவின் பந்துவீச்சுக்கள் சிறப்பாக இருந்தது.

இதே கட்டத்தில் ரேயல் கல்லூரி வீரர்கள் தளையசிங்கம், ஸ்கந்தகுமார், வியனகே விளையாட்டு பாராட்டக்கூடியதாக இருந்தது.

### ஒரு கண்ணோட்டம்

கொழும்பின் மிகப்பெரிய கல்லூரி கிரிக்கெட் கோஷ்டியான ரேயல், யாழ்ப்பாணம் ரசிகர்கள் எதிர்பாராத அளவுக்கு குறைவாகவே விளையாடியிருக்கின்றனர். இந்த வகையில் இதனுடன் சமமாக நின்று 'போரிட்ட' மத்திய கல்லூரி வீரர்கள் உண்மையில் பாராட்டத்தக்கவர்கள். கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணத்து பிரபல கல்லூரி கிரிக்கெட் கோஷ்டியை (சென். ஜோன்ஸ்) இனிங்ஸால் வெற்றிகொண்ட ரேயல்; யாழ்ப்பாண மத்தியகல்லூரியுடன் ஏற்பட்ட மோதலில் எதிர்பார்த்தஅளவு வெற்றி பெருதது மத்திய கல்லூரியின் தரத்தை கணிக்கக்கூடியதாக இருக்கிறது.

இக்கிரிக்கெட் போட்டிக்கு திரு. சிங்கராயர், திரு, ஞானரத்தினம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினுர்கள்.

—''அவதானி''—

## உடுவில். . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்ததாகவுள்ள குற்றச்சாட்டை கொலைசெய்ய முயன்றதாக மாற்றியமைத்தார். பின்னர் எதிரியை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்கும்படியும், 3000 ரூபாய் பிணையில் செல்லும்படியும், பொலிசாருக்குக் கைவிரல் அடையாளங்களைக் கொடுக்கும்படியும், இம்மாதம் 17ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்

## துப்பாக்கி சூட்டுக்கு ஒருவர் பலி

வவனியா, வியா.

வவனியாவில் பூனையடியைச் சேர்ந்த சாத்தமுத்து சண்முகதாஸன் என்பவர் மூன்று தினங்களுக்குமுன் துப்பாக்கிக் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ரயில் நிலையத்துக் கருகாமையில் அவர் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தபோது யாரோ சுட்டு விட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது. நேற்று திரு. சண்முகதாசன் ஆஸ்பத்திரியில் காலமானுர்.

இது சம்பந்தமாக மூன்று நபர்களை வவனியாப் பொலிஸார் சந்தேகத்தின் மீது கைது செய்துள்ளனர்.

## சென்னை . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி;

விளையாடியபொழுது ஒரு விக்கட் நஷ்டத்துக்கு 68 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மெறயிட் ஆட்டமிழந்திருந்தார்.

இன்று வியாழக்கிழமை இறுதிநாளாகும். இலங்கை கோஷ்டியினர் இன்று வியாழக்கிழமை மொத்தம் 255 ஓட்டங்கள் எடுக்க முடியுமென்று எதிர்பார்க்கமுடியாது. இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படாத போதிலும் ''கோபாலன்'' கேடயத்தை சென்னைக் கோஷ்டியினர் சுலபமாகச் சுவீகரித்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்க இடமுண்டு.

## மாதமொரு உணவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தரக்காரியதரிசி ஆகியோரும் சென்றிருந்தனர்.

கப்பலிலிருந்து உணவு மூடைகளை தொழிலாளர் இறக்கியதை பார்வையிட்ட மந்திரி அவர்களின் உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உழைப்பையும் பார்த்து பாராட்டினுர்.

## டொல்பின்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளது, ''டொல்பின்'' மீன்கள் மீது இரக்கம் காட்டுமாறும் அவற்றைக்சொல்லவேண்டாமென்றும் ரஷ்யா தனது கோரிக்கையில்தெரிவித்துள்ளது.

''டொல்பின்'' மீன்கள் சிறு மீன்களைப் பிடித்துச் சாப்பிட்டு விடுகின்றன என்றும் மீன்வலைகளை அறுத்து நாசமாக்கி விடுகின்றன என்றும் இஸ்ரேல் நாட்டு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மீன்கள் மீதுஇரத்கம் காட்டும் அமெரிக்கர்கள் இதனை பல்வேறு துறைகளில் பயன்படுத்தி வருகின்றனர்.

கடலுக்கடியில் செய்திகளைக் கொடுத்தனுப்புவதில் ''டொல்பின்களை'' அமெரிக்கர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

S. R. S.
ஜவுளி மாளிகையில்
C. W. E. புடவைகள்

கூ. மொ. வி. ஸ்தாபனத்தாரின் புடவைகள் 97-ம் இலக்க கூப்பனுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை
(கூ. மொ. வி. அங்கீகாரம் பெற்ற புடவை வர்த்தகர்)
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

## கொலை முயற்சி வழக்கு

மாவிட்டபுரம். புதன்

சுன்னுகம்பொலிஸ்கான்ஸ்டபிள்கள் இருவரைக் கைக்குண்டுவீசி கொலை செய்ய முயன்றதாக சுன்னுகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்குமல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாறு முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏழாலையைச் சேர்ந்தவர்களான கந்தையா வீரசிங்கம், குட்டித்தம்பி கனகலிங்கம், சுன்னுகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தங்கராசா, ஏழாலையைச்சேர்ந்த குட்டித்தம்பி கனகசுந்தரம் ஆகியோர் சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிள்களான பியரட்ணு, பெரினுண்டோ ஆகியோர்மீது குண்டு வீசிக் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் முதலாம் எதிரிதரப்பில் வழக்கறிஞர்களான எஸ். சிறீதரன், வி. கணபதிப்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரையும், 2-ம் 4- எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜரானுர்கள். மூன்ரும் எதிரிதரப்பில் ஒருவரும் ஆஜராகவில்லை. மேல்விசாரணை இம்மாதம் 24-ந் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## கரபத்தாட்டப் போட்டி

ஊர்காவற்றுறை, விழா.

தீவுப்பகுதிக்கான கைப்பந்தாட்டப்போட்டி ஒன்றை புளியங்கூடல் சனசமூக நிலையம் நடாத்தி வருகிறது. இதற்கான ஆரம்பப் போட்டிகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. இதுவரை பத்துக் குழுவினர்கள் விளையாட்டில் பங்கு பற்றினர்.

தீவுப்பகுதி எம். பி. திரு நவரத்தினம் கேடயத்திற்காக நடைபெறும் இறுதிப் போட்டி புதுவருட தினத்தன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கரத்தை, வியா.

சங்கரத்தை கிராமமுன்னேற்றச் சங்க உறுப்பினரும் சமூகத் தொண்டருமான திரு. வி. கமலநாதனின் ஞாபகார்த்தவிழாவை அடுத்த மாதம் கொண்டாட சங்கரத்தையிலுள்ள சமூக இயக்கங்கள் தீர்மானித்துள்ளன.

## 'மர்ம மங்கை' ஒருவதந்தி!

கொழும்பு, வியாழன்

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் மர்மமங்கையொருத்தி இளங்காளையர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தும், கொலை செய்துவிட்டும் மாயமாக மறைந்துவிடுவதாக அடிபட்ட செய்தியில் உண்மையில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வட்டாரத்துக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியரங்கில் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற பௌர்ணமி தினக் கலைநிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில்குறிப்பிட்டார்.

திரு. துரையப்பா மேலும் கூறியதாவது:—

''யாழ்ப்பாண மாநகர சபை, வரியிறுப்பாளர்களின் பொதுப் பணத்தைக் கொண்டு பௌர்ணமிதினக் கலைநிகழ்ச்சிகளை நடத்திவருகின்றது. இவ்விறத கலைநிகழ்ச்சிகளை மாநகரசபை நடத்தி வருவதற்குக் காரணம், தமிழ்க் கலைகளை இந்த நாட்டில் வளர்க்கவேண்டும், இளம் தமிழ்க் கலைஞர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்ற வாஞ்சைதான். தமிழ்க்கலைகள் செழித்து வளரவேண்டும்! தமிழ்க் கலைஞர்கள் குறிப்பாக சொந்தநாட்டுக் கலைஞர்களைக் கௌரவிக்கும் பழக்கம் ஏற்படவேண்டும். அப்படியேற்பட்டால்தான் எமது கலைகளைக் குறித்தும் எமது கலைஞர்பெருமக்களைக் குறித்தும் நாம் பெருமைப்பட முடியும். பௌர்ணமிதினக் கலைநிகழ்ச்சிகள் அதற்குப் பயன்படவேண்டும். ந. நி.

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஸ்டேசனடியைச் சேர்ந்த முன்னுள் பிரபல வர்த்தகரும் குத்தகை காரரும் ஆகிய திரு. இளையதம்பி முனிஐயா அவர்கள் காலமானுர். காலம்சென்ற கண்ணையா, இராசையா துரையப்பா அவர்களின் சகோதரரும் சின்னம்மாவின் தம்பியுமாவர். அன்னுரின் ஈமைக்கிரியைகள் வில்லூன்றி மயானத்தில் மாலை 3 மணியளவில் நடைபெறும். 30/6 புது ரோட் கொட்டடி.

46

புதுவருட தினத்தை
சிறப்பாகக் கொண்டாட
அரியதோர் சந்தர்ப்பம்!

கூ. மொ. வி. (C. W. E.) ஸ்தாபனத்தாரின் புடவைகள் கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ரேம்.

இன்னும்
உங்களுக்குத் தேவையான
பலவிதமான
புடவை வகைகளும்
எம்மிடம்
மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. அப்பையா அன் கோ
(கூ. மொ. வி. அங்கீகாரம்பெற்ற புடவை வியாபாரிகள்)
82, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 506
கிளை: 54, பெரியகடை யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org